Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

தமிழ் மக்கள் குரல்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkurall@gmail.com
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact : 98413 59935

மலர் 1 | சென்னை | தினசரி | 4 பக்கம் | வெள்ளி, பிப்ரவரி 21, 2025 | இதழ் 314

# குடியரசுத் துணைத் தலைவர் வரும் சனிக்கிழமை மகாராஷ்டிராவின் சத்ரபதி சம்பாஜி நகருக்கு பயணம்

சென்னை, 21 பிப்ரவரி 2025: குடியரசுத் துணைத் தலைவர் திரு ஜக்தீப் தன்கர், மகாராஷ்டிரா மாநிலம் சத்ரபதி சம்பாஜி நகருக்கு 2025 பிப்ரவரி 22 அன்று ஒரு நாள் சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார். இந்தப் பயணத்தின் போது, மகாராஷ்டிர மாநிலம் சம்பாஜி நகரில் உள்ள டாக்டர் பாபாசாகேப் அம்பேத்கர் மராத்வாடா பல்கலைக்கழகத்தின் 65-வது பட்டமளிப்பு விழாவில் தலைமை விருந்தினராகக் குடியரசுத் துணைத் தலைவர் கலந்து கொள்கிறார். சம்பாஜி நகரில் உள்ள எஸ்.பி. கல்லூரியில் அரசியலமைப்பு விழிப்புணர்வு ஆண்டு மற்றும் அமிர்தப் பெருவிழாவையும் அவர் தொடங்கி வைக்கிறார். தமது பயணத்தின் ஒரு பகுதியாக, திரு தன்கர் எல்லோராவில் உள்ள குருஷ்னேஷ்வர் கோயிலில் பூஜை மற்றும் வழிபாடுகளை நடத்துகிறார். னுல் லோரா குகைகளை (கைலாஷ் குகை) அவர் பார்வையிடுகிறார்.

# எல்லைத் தாண்டி மீன்பிடித்ததாக 10 ராமேஸ்வரம் மீனவர்கள் கைது: இலங்கை கடற்படை அட்டூழியம்

சென்னை, 21 பிப்ரவரி 2025: எல்லைத் தாண்டி மீன்பிடித்ததாக கூறி ராமேஸ்வரம் மீனவர்கள் 10 பேரை இலங்கை கடற்படை கைது செய்துள்ளது.

ராமநாதபுரம் மாவட்டம் ராமேஸ்வரத்தைச் சேர்ந்த மீனவர்கள், மீன்பிடி துறைமுகத்தில் இருந்து உரிய அனுமதிச் சீட்டு பெற்று விசைப்படகுகளில் வழக்கம்போல் மீன்பிடிக்கக் கடலுக்குச் சென்று மீன்பிடித்துக் கொண்டிருந்தனர். அப்போது அங்கு ரோந்துக்கு வந்த இலங்கை கடற்படையினர் எல்லை தாண்டி மீன் பிடித்ததாகக் கூறி ராமேஸ்வரம் மீனவர்கள் 10 பேரை கைது செய்தனர். அதோடு அவர்களின் 3 விசைப்படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டன.

ராமேசுவரம் மீன்பிடி துறைமுகத்திலிருந்து கடலுக்குச் சென்ற முனியேந்திரன் என்பவருக்கு சொந்தமான விசைப்படகை இலங்கை கடற்படையினர் மன்னார் கடற்பகுதியில் நேற்று இரவு சிறைப்பிடித்து படகுகளிலிருந்த ஜோதிராஜன், ராமு, அருள்ஜார், ஜான் கென்னடி ஆகிய 4 மீனவர்களை கைது செய்து தலைமன்னார் கடற்படை முகாமுக்கு அழைத்துச் சென்றனர்.

மேலும் ராமேசுவரத்திலிருந்து கடலுக்கு சென்ற சூசை வியாகுலம், ஆல்ட்ரின் ஆகிய இருவருக்குச் சொந்தமான 2 விசைப்படகுகளை நெடுந்தீவு அருகே இலங்கை கடற்படையினர் இன்று அதிகாலை சிறைப்பிடித்தனர். இந்தப் படகுகளிலிருந்த ஜான் முத்துக்குமார், லவ்சன், பவுல்ராஜ், அந்தோணி செல்வம், ஜான்போஸ்கோ, ஜான்ராஜ் ஆகிய 6 மீனவர்களை கைது செய்யப்பட்டு காங்கேசன்துறை கடற்படை முகாமிற்கு கொண்டு செல்லப்பட்டனர். தமிழக மீனவர்கள் மன்னார் மற்றும் யாழ்ப்பாணம் மாவட்ட மீன்வளத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டு நீதிமன்ற காவலில் வவுனியா மற்றும் யாழ்ப்பாணம் சிறையில அடைக்கப்பட உள்ளனர்.

இலங்கை கடற்படை கைது செய்துள்ள சம்பவம் குறித்து அறிந்த மீனவ கிராமங்களை சேர்ந்த மீனவர்கள் கைதானவர்களை மீட்க மத்திய, மாநில அரசுகள் உடனடியாக தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்துள்ளனர். கடந்த ஜனவரி மாதத்திலிருந்து 13 படகுகள் இலங்கை கடற்படையினரால் சிறைப்பிடிக்கப்பட்டு 99 தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினரால் கைது செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# ஆயுதப்படைகளுக்கு ரூ.697.35 கோடி மதிப்பில் பளு ஏற்றும் ட்ரக் வாகன கொள்முதலுக்கான ஒப்பந்தத்தில் பாதுகாப்பு அமைச்சகம் கையெழுத்து

சென்னை, 21 பிப்ரவரி 2025: கரடு முரடான சாலைகளில் ஆயுத தளவாடங்களை ஏற்றிக் கொண்டு செல்லும் வகையில் 1868 ட்ரக் வாகனங்களை கொள்முதல் செய்வதற்கான ஒப்பந்தத்தில் பாதுகாப்பு அமைச்சகம் கையெழுத்திட்டுள்ளது. முப்படைகளுக்காக ரூ.697.35 கோடி செலவில் இந்த வாகனங்களை கொள்முதல் செய்வதற்கான ஒப்பந்தம் பாதுகாப்புத்துறைச் செயலர் திரு ஆர் கே சிங் முன்னிலையில் ஏஸ் லிமிடெட் மற்றும் ஜேசிபி இந்தியா லிமிடெட் நிறுவனங்களுடன் கையெழுத்தானது. பாதுகாப்புப் படைகளின் செயல் திறனை மேம்படுத்தும் வகையில் ஆயுதங்களை பல்வேறு பகுதிகளுக்கு கொண்டு செல்ல ஏதுவாக இந்த வாகனங்கள் கொள்முதல் செய்யப்படுகின்றன. உள்நாட்டுத் தளவாட

உற்பத்தி நிறுவனங்களிடமிருந்து கொள்முதல் செய்யப்படுவதன் மூலம் நாட்டின் பாதுகாப்புத் தளவாட உற்பத்தித் திறன் மேலும் அதிகரிக்கும். இதன் மூலம் ஏராளமானவர்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்புகளும் உருவாகும். ஆயுதத் தளவாட உற்பத்தியில் ஈடுபட்டுள்ள குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு இத்தகைய நடவடிக்கைகள் உத்வேகம் அளிப்பதாக உள்ளது. நாட்டின் பாதுகாப்பு கட்டமைப்பு, நவீனப்படுத்தும் வகையிலும் உள்நாட்டு தொழில்நிறுவனங்களுக்கு ஆதரவளிக்கும் வகையில் இந்த கொள்முதல் நடவடிக்கை அமைந்துள்ளது.

# செல்வமகள் சேமிப்பு திட்ட கணக்கு தொடங்கும் முகாம் தாம்பரம் அஞ்சல் கோட்டத்தில் பிப்ரவரி 21 அன்று நடைபெறுகிறது

சென்னை, 21 பிப்ரவரி 2025: பெண் குழந்தைகளின் நலனுக்காக மத்திய அரசு 2015-ம் ஆண்டு அறிமுகம் செய்த செல்வமகள் சேமிப்புத் திட்டத்தில், கணக்குகள் தொடங்குவதற்கான சிறப்பு முகாம் நாளை தாம்பரம் அஞ்சல் கோட்டத்தில் நடைபெறவுள்ளது.

சென்னை நகர அஞ்சல் மண்டலத்தில் உள்ளடங்கிய தாம்பரம் அஞ்சல் கோட்டத்திற்கு உட்பட்ட தாம்பரம், ஆவடி, அம்பத்தூர் தலைமை தபால் அலுவலகங்களிலும், குரோம்பேட்டை, பல்லாவரம், அம்பத்தூர், தொழிற்பேட்டை, திருவொற்றியூர், சேலையூர், தாம்பரம் கிழக்கு, காமராஜ் நகர், பூந்தமல்லி, பாடி, செங்குன்றம், வில்லிவாக்கம், கும்மிடிப்பூண்டி, பொன்னேரி, மேடவாக்கம், போரூர், கொளத்தூர், மீஞ்சூர், முகப்பேர் ஆகிய துணை தபால் அலுவலகங்களிலும் இந்த முகாம் நடைபெறும்.

மேலும், பிப்ரவரி 28, மார்ச் 10 ஆகிய தேதிகளிலும் செல்வமகள் சேமிப்புக் கணக்குகளை தொடங்குவதற்கான சிறப்பு முகாம்கள் நடைபெறவுள்ளன. இந்நாட்களில் இந்த தபால் அலுவலகங்களில் சிறப்பு கவுன்டர்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த திட்டத்தின்கீழ், 10 வயதிற்குட்பட்ட பெண் குழந்தைகளுக்காக பெற்றோர் அல்லது சட்டப்பூர்வ பாதுகாவலர் மூலம் ஒரு நிதியாண்டுக்கு குறைந்தபட்சம் ரூ.250-ம், அதிகபட்சம் ரூ.1.5 லட்சமும் செலுத்தி கணக்கை தொடங்கலாம். இந்தத் திட்டக் கணக்கிற்கு 8.2 சதவீத வட்டி வழங்கப்படுகிறது. வருமான வரிச் சட்டத்தின் பிரிவு 80சி-ன் படி, ஒரு நிதியாண்டிற்கு ரூ.1.5 லட்சம் வரை வரிச்சலுகை வழங்கப்படுகிறது. பெண் குழந்தையின் 18 வயதில் அல்லது 10 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற பின் உயர் கல்வி நோக்கங்களுக்காக கணக்கில் இருந்து 50 சதவீத பணத்தை எடுக்கலாம். கணக்கு தொடங்கப்பட்ட நாளிலிருந்து 21 ஆண்டுகளுக்குப் பின் கணக்கு முதிர்ச்சி அடைகிறது. 18 வயது நிரம்பிய பின் (திருமணத்திற்கு ஒருமாதத்திற்கு முன் அல்லது 3 மாதங்களுக்குப் பின்) திருமணத்தின் போது கணக்கை முடித்துக் கொள்ளவும் வழி உள்ளது.

# டெல்லியின் 4வது பெண் முதலமைச்சராக ரேகா குப்தா இன்று பதவி ஏற்றார். பிரதமர் மோடி, மத்திய அமைச்சர் அமித்ஷா பங்கேற்பு



சென்னை, 21 பிப்ரவரி 2025: டெல்லியின் முதலமைச்சராக பா.ஜ.க.வின் முதல் முறை எம்.எல்.ஏ.வான ரேகா குப்தா இன்று பதவியேற்றுக் கொண்டார். நிகழ்ச்சியில் பிரதமர் மோடி, மத்திய அமைச்சர்கள் அமித்ஷா, ராஜ்நாத்சிங் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

டெல்லி சட்டமன்ற தேர்தலில் பா.ஜ.க. 48 இடங்களை கைப்பற்றி சுமார் 27 வருடங்களுக்குப் பிறகு ஆட்சியை கைப்பற்றியது. முதல்வர் யார் என அறிவிக்காமல், இன்று பதவி ஏற்பு விழா நடைபெறும் என அறிவிக்கப்பட்டது. இதற்கான ஏற்பாடுகள் டெல்லி ராம்லீலா மைதானத்தில் நடைபெற்று வந்தது.

இந்த நிலையில் நேற்று டெல்லி பாஜக சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றது. இதில் ரேகா குப்தா முதல்வராக தேர்ந்தெடுக்கப்பட்டார். டெல்லி சட்டமன்ற பா.ஜ.க. கட்சி தலைவராக தேர்வு செய்யப்பட்ட நிலையில், துணைநிலை ஆளுநர் சக்சேனாவை சந்தித்து ரேகா குப்தா ஆட்சி அமைக்க உரிமை கோரினார்.

4வது பெண் முதல்வர் - அதனடிப்படையில் டெல்லி ராம்லீலா மைதானத்தில் இன்று பகல் 12 மணிக்கு நடைபெற்ற பதவியேற்பு விழாவில் டெல்லி முதலமைச்சராக ரேகா குப்தா பதவியேற்றார். அவருக்கு துணை நிலை கவர்னர் சக்சேனா பதவிப்பிரமாணமும், ரகசிய காப்பு பிரமாணமும் செய்து வைத்தார். இவர் டெல்லியின் 4வது பெண் முதல்வர் ஆனார்.

ஆம் ஆத்மி கட்சி தேசிய ஒருங்கிணைப்பாளர் அரவிந்த் கெஜ்ரிவாலை தோற்கடித்த பர்வேஷ் வர்மா துணை முதலமைச்சராக பதவியேற்றார். ஆஷிஷ் சூட், மஞ்சிந்தர் சிங் சிர்ஷா, ரவீந்தர் இந்தராஜ் சிங், கபில் மிஸ்ரா மற்றும் பங்கஜ் குமார் சிங் ஆகியோர் அமைச்சர்களாக பதவியேற்றுக் கொண்டனர்.

பதவியேற்பு விழா நிகழ்ச்சியில் பிரதமர் மோடி, அமைச்சர்கள் அமித்ஷா, ராஜ்நாத் சிங் மற்றும் ஆந்திரா முதல்வர் சந்திரபாபு நாயுடு, துணை முதல்வர் பவன் கல்யாண் உள்ளிட்ட தலைவர்கள் கலந்து கொண்டனர்.

மேலும் பா.ஜ.க. ஆளும் மாநில முதலமைச்சர்கள், தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இடம்பெற்றுள்ள கட்சிகளின் தலைவர்களும் பங்கேற்றனர்.

டெல்லி மாநிலத்தில் சுஷ்மா சுவராஜ் (பா.ஜ.க.), ஷீலா தீட்ஷித் (காங்கிரஸ்), அதிஷி (ஆம் ஆத்மி) ஆகியோரைத் தொடர்ந்து 4-வது பெண் முதலமைச்சராக தற்போது ரேகா குப்தா பதவி ஏற்றுள்ளார்.

50 வயதாகும் ரேகா குப்தா, ஷாலிமார் பார்க் தொகுதியில் ஆம் ஆத்மி வேட்பாளர் பந்தனா குமாரியை சுமார் 30 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் வீழ்த்தி வெற்றி பெற்றவர். இந்த தொகுதியில் வெற்றி பெற்றதன் மூலம் முதல் முறையாக எம்.எல்.ஏ. ஆகியுள்ளார். தனது முதல் வெற்றியிலேயே முதலமைச்சராகவும் தேர்வாகியுள்ளார்.

கல்லூரி பருவத்தில் இருந்தே அரசியலில் அதிக ஈடுபாடு கொண்ட ரேகா குப்தா, டெல்லி பல்கலைக்கழக மாணவர் சங்க நிர்வாகி தேர்தலில் வெற்றி பெற்றார். பின்னர் பா.ஜ.க கட்சியில் சேர்ந்த அவர் 3 முறை மாநகராட்சி கவுன்சிலராக தேர்ந்தெடுக்கப்பட்டார். கடந்த 2022-ம் ஆண்டு டெல்லி மேயர் தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்தார். பா.ஜ.க. கட்சியில் பல்வேறு பொறுப்புகளை அவர் வகித்துள்ளார்.

பதவி ஏற்பு விழாவையொட்டி ராம்லீலா மைதானத்தில் 3 மேடைகள் அமைக்கப்பட்டிருந்தன. இதில் ஒரு மேடையில் பிரதமர் மோடி மற்றும் பதவி ஏற்க உள்ள முதலமைச்சர், பிற அமைச்சர்கள் அமர்ந்திருந்தார்கள். 2-வது மேடையில் மத்திய அமைச்சர்கள் பா.ஜ.க. ஆளும் மாநிலங்களின் முதலமைச்சர் அமர்ந்திருந்தார்கள் 3-வது மேடையில் மத குருமார்கள் இருந்தனர். பதவி ஏற்பு விழாவை முன்னிட்டு டெல்லியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. 25 ஆயிரத்துக்கும் மேற்பட்ட போலீசார் குவிக்கப்பட்டிருந்தனர். போக்குவரத்தும் மாற்றி அமைக்கப்பட்டிருந்தது.

# தில்லி யஷோ பூமியில் 6-வது சர்வதேச தோல்பொருள் கண்காட்சி தொடங்கியது

சென்னை, 21 பிப்ரவரி 2025: தோல்பொருள் ஏற்றுமதிக் குழுமம் ஏற்பாடு செய்துள்ள 6-வது சர்வதேச தோல்பொருள் கண்காட்சி புதுதில்லியில் உள்ள யஷோ பூமியில் இன்று தொடங்கியது. இரண்டு நாட்கள் நடைபெறும் இந்தக் கண்காட்சி, தோல்பொருள் மற்றும் காலணி உற்பத்தித் துறையில் உலக அளவில் இந்தியாவின் வலுவான நிலையை எடுத்துக் காட்டும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

8,000 சதுரமீட்டர் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ள இந்தக் கண்காட்சி அரங்கில் 225 இந்தியக் கண்காட்சியாளர்கள் தங்களது பொருட்களை காட்சிப்படுத்தியுள்ளனர். இதில் நவீன வடிவிலான தோல்பொருள்கள், காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. தோல் பொருள் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள 500-க்கும் அதிகமான இந்திய நிறுவனங்களின் பிரதிநிதிகளும் இதில் பங்கேற்கின்றனர். வர்த்தகத் துறை இணைச்செயலாளர் திரு விமல் ஆனந்த் இந்தக் கண்காட்சியைத் தொடங்கி வைத்து உரையாற்றினார்.

தோல் பொருள் ஏற்றுமதியில் இந்தியா குறிப்பிடத்தக்க வளர்ச்சி அடைந்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். கோவிட் பெருந்தொற்றுக்குப் பிறகு நாட்டில் தோல் மற்றும் காலணி தொழில்துறை வளர்ச்சி பெற்று ஏற்றுமதியிலும் சிறந்து விளங்குவதாக அவர் கூறினார். 2025-26-ம் நிதியாண்டில், 7 பில்லியன் அமெரிக்க டாலர் அளவுக்கு தோல் பொருட்களை ஏற்றுமதி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

ஈரப்பதத்துடன் கூடிய நீல நிற தோல்பொருள்களுக்கு இறக்குமதி தீர்வையிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டது உட்பட அரசின் பல்வேறு கொள்கைகள் காரணமாக இத்துறை வளர்ச்சி அடைந்து வருவதாக அவர் தெரிவித்தார்.

# கரண் குமார் அக்டோபர் 2022-இல் மெடிபட்டி இல் அறுவை சிகிச்சை பராமரிப்பு பகுதியில் ஒரு கேர்பட்டி ஆக சேர்ந்தார்

சென்னை 21, பிப்ரவரி 2025: நிலைமை: ஒரு 64 வயது மனிதர் அவரது அன்றாட வாழ்க்கை மற்றும் ஒட்டுமொத்த நலன்கள் கடுமையாக பாதிக்கப்பட்ட நிலையில் கடும் வயிற்று வலி, குமட்டல், வாந்தி, காய்ச்சல் மற்றும் குளிர் நடுக்கம் போன்றவற்றால் போராடிக் கொண்டிருந்தார்.

வாடிக்கையாளர் பிரச்சினை: இதற்கும் மேலாக, அவர் அவசர மருத்துவ கவனம் தேவைப்படுகின்ற வயிற்று உப்புசம் மற்றும் வீக்கம், மூச்சுத் திணறல் மற்றும் வேகமான இதயத் துடிப்பு போன்ற பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டார்.

வாடிக்கையாளருக்கு உதவுவதற்கு சிபி எவ்வாறு மேலும் சென்று, 'ாடிக்கையாளர் பீடிப்பை வெளிப்படுத்தினார்: தனது மாமனாருக்கு உடனடி சிணீச்சை தேவைப்படுவதாகக் கூறின உதவியாளரிடம் இருந்து மெடிபட்டி இல் ஒரு அர்ப்பணிப் புள்ள கேர்பட்டி ஆன கரண் குமார் ஒரு அழைப்பைப் பெற்றார். ஆரம்பத்தில், அவர்கள் ஒரு பொது இரைப்பைக் குடலியல் நிபுணரை அணுகினர், ஆனால் துரதிர்ஷ்டவசமாக, அளிக்கப்பட்ட அந்த சிகிச்சை போதுமானதாக இல்லை. அவர்களின் கவலைகளைப் புரிந்து கொண்டு, மெடிபட்டி உடன் இணைந்த மருத்துவமனைகளின் பணமில்லா அறுவை சிகிச்சைகள், மலிவு விலை மற்றும் அதிக வெற்றி விகிதங்கள் ஆகியவை அடங்கிய நன்மைகளை னுடுத் துரைத்து அவர்களை நான் ஆறுதல் படுத்தினேன். நிம்மதியடைந்து, நம்பிக்கையடைந்த அவர், தொடர ஒப்புக் கொண்டார். நோயாளி நம்பிக்கையுடன் மீட்புப் பாதையில் இருப்பதை உறுதி செய்கின்ற வகையில் உடனடியாக சென்னையில் உள்ள மருத்துவமனையில் ஒரு இரைப்பைக் குடலியல் அறுவை சிகிச்சை நிபுணருடன் ஒரு ஆலோசனைக்கு நான் ஏற்பாடு செய்தேன்.

மதிப்பீட்டின் பின்னர், இது ஒரு கடுமையான நோய் என்பது தெளிவாகியது. குடல் அறுவை சிகிச்சை (போவல் ரீசெக்ஷன்) மற்றும் டைவர்ஷன் கோலோஸ்டோமி ஆகியவற்றுடன் இணைந்த அவசர ஆய்வு லேபரோட்டமி (எமெர்ஜன்சி எக்ஸ்புலோரேட்டரி லேப்ரோடமி) ஆனது பரிந்துரைக்கப்பட்ட செயல்முறை ஆகும். இதற்கான மதிப்பிடப்பட்ட செலவு தோராயமாக ரூ. 7 முதல் 8 லட்சம் ஆகும்.

அறுவை சிகிச்சை எவ்வாறு செய்யப் படுகிறது மற்றும் அதில் உள்ள நடைமுறைகளை நான் விளக்க விரும்புகிறேன். குடல் அறுவை சிகிச்சை (போவல் ரீசெக்ஷன்) மற்றும் டைவர்ஷன் கோலோஸ்டோமி ஆகியவற்றுடன் ஒரு அவசர ஆய்வு லேபரோட்டமி (எமெர்ஜன்சி எக்ஸ்புலோரேட்டரி லேப்ரோடமி) என்பது ஒரு அறுவை சிகிச்சை நடைமுறையாகும். இதில், ஒரு அறுவை சிகிச்சை நிபுணர் கடுமையான வயிற்று வலி அல்லது பிற அறிகுறிகளின் காரணத்தை ஆய்வு செய்வதற்கு ஒரு அவசர நிலையில் வயிற்றைத் திறக்கிறார் ("ஆய்வு லேபரோட்டமி") பின்னர், குழூலின் சேதமடைந்த பகுதியை அகற்றுகிறார் ("குடல் அறுவை சிகிச்சை"), அதே வேளையில் பாதிக்கப்பட்ட பகுதி குணமடையும் வரை மலம் பாதுகாப்பாக உடலை விட்டு வெளியேறுவதற்காக வயிற்று சுவரில் பெருங்குடலில் ஒரு தற்காலிக திறப்பை உருவாக்குகிறார் ("டைவர்ஷன் கோலோஸ்டோமி").

இந்த செயல்முறை, ஒரு துளைக்கப்பட்ட குடல் (ஃபெர்போரேட்டேட் போவல்), கடுமையான குடல் அடைப்பு (இன்டெஸ்டினல் அப்ஸ்ட்ரக்ஷன்), அல்லது பெரிய வயிற்று காயம் (அப்டாமினல் தரோமா) போன்ற உயிருக்கு ஆபத்தான நிலைமைகளில் உடனடி தலையீடு தேவைப்படும் போது பொதுவாக செய்யப் படுகிறது. தள்ளுபடிகளைப் பெறுவதற்கும் மருத்துவம் சாராத செலவுகளை (என்எம்இ) குறைப் பதற்கும் நான் பணியாற்றுவேன் என்று குடும்பத்தினருக்கு நான் உறுதியளித்தேன். மெடிபட்டி வழங்கும் சேவைகளை நான் விளக்கினேன் ஏற்றும் எங்கள் குழு ஒரு டிசிஎஸ் நோயாளருக்கு ஒரு வெற்றிகரமான இதய அறுவை சிகிச்சையில் எவ்வாறு உதவியது என்பதைப் பற்றிய ஒரு வெற்றி நிகழ்வை பகிர்ந்தேன்.

மருத்துவர் ஆலோசனையைத் தொடர்ந்து, நோயாளரின் நிலைமைக்கு அறுவை சிகிச்சை தேவைப் படுவதாக இருந்தது. அறுவை சிகிச்சைக்குப் பிறகு, இந்த அறுவை சிகிச்சையின் தன்மை காரணமாக, இனி மலம் ஒரு பையில் வெளியேறும் என குடும்பத்தினருக்கு விளக்கப்பட்டது. நோயாளர் ஐசியூ/சிசியூ வில் அனுமதிக்கப் பட்டார், முதலில் 10-15 நாட்கள் தங்குவதாக எதிர்பார்க்கப்பட்டது. எனினும், அவரது குணமடைதல் மெதுவாக இருந்ததால், தினசரி மருத்துவமனை கட்டணம் அதிகரிக்க வழிவகுத்தது. இது குடும்பத்தினரை கவலையடையச் செய்தது, ஏனெனில் அவர் இறுதியில் 28 நாட்கள் மருத்துவ மனையில் தங்க வேண்டியதாயிற்று.

இந்த காலம் முழுவதும், நான் குடும்பத்தினருடன் தினசரி தொடர்பு வைத்திருந்தேன். கிட்டத்தட்ட 25 நாட்களுக்குப் பிறகு வெளியேறுவதற்கு அணுகியபோது, அவரது தைராய்டு சுரப்பிகளில் ஒரு தொற்று இருப்பது கண்டறியப்பட்டது. இந்த சிக்கலுக்கு (ஏற்கனவே ஏற்பட்ட ரூ.14 லட்சம் செலவுக்கு கூடுதலாக) ரூ.4 லட்சம் செலவில் மற்றொரு அறுவை சிகிச்சை தேவைப்பட்டது.

இந்த மருத்துவமனை, அறுவை சிகிச்சையைத் தொடர்வதற்கு முன்பாக ரூ. 3 லட்சத்தை முன்பணமாக செலுத்த வேண்டும் என்று வலியுறுத்தியது. நான் காப்பீட்டு நிறுவனத் திடமிருந்து ஒப்புதல்களைப் பெற்றேன் மேலும் மருத்துவமனை ஊழியர்களுடன் யூேச்சு வார்த்தை நடத்தினேன். பல உரையாடல்களுக்குப் பிறகு, அவர்கள் அறுவை சிகிச்சையைத் தொடங்க ரூ.50,000 ஐ ஏற்க ஒப்புக் கொண்டனர்.

இந்த சவாலான பயணம் முழுவதும், நான் நோயாளரின் குடும்பத்தினருடன் நெருக்கமாக தொடர்பிலிருந்து, மொத்தம் 28 நாட்களுக்குப் பிறகு விடுவிப்பு இறுதியாக அடையப்படும் வரை, இரவு பல மணி வரை கூட அவர்களின் தேவைகளில் அவர்களுக்கு உதவிசெய்தேன்.

இந்த நோயாளர் பின்னர் தனது ஹெச்ஆர் மற்றும் நிர்வாகத்திற்கு ஒரு மின்னஞ்சல் அனுப்பி, கூடுதல் ஆதரவைக் கோரினார், ஏனெனில் அவரது காப்பீட்டு பாலிசி ரூ. 14 லட்சம் வரை மட்டுமே உள்ளடக்கியது. எனினும், எங்கள் முயற்சிகள் மற்றும் தொடர்ந்த பின்தொடர்வுகளின் காரணமாக, அவர் அந்த தொகையை விட அதிகமான ஒப்புதல்களைப் பெற்றார். தனது சொந்த நிதியிலிருந்து ஒரு பகுதியைச் செலுத்திய பிறகு, அவர் விடுவிக்கப்பட்டார். இன்றைய தேதியில்இந்த நோயாளர் குணமாகுதலில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் கண்டுள்ளார் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறேன். அவர் வழக்கமான பின்தொடர்தல்கள் திட்டமிடப் பட்டுள்ளதன் மூலம் இப்போது சாதாரண மருந்தளிப்புகளுடன் உள்ளார். இந்த அனுபவம், சிக்கலான மருத்துவ சூழ்நிலைகளை நிர்வகிப்பதில் கேர்பட்டி களின் முக்கிய பங்கை மட்டுமல்லாமல், நோயாளர்களின் மருத்துவ பயணம் முழுவதும் அவர்களுக்கு ஆதரவளிப்பதில் எங்கள் அர்ப்பணிப்பையும் எடுத்துக்காட்டுகிறது. இந்த நோயாளர் மற்றும் அவரது குடும்பத்தினர், மெடிபட்டி யின் தளராத ஆதரவு மற்றும் அர்ப்பணிப்புக்கு பெரும் திருப்தியை தெரிவித்தனர். இந்தியா முழுவதும் உள்ள மக்களை அடைகின்ற மெடிபட்டி யின் முயற்சி பாராட்டத் தக்கது என்று அவர்கள் வலியுறுத்தினர்.

அதிக தரமான மருத்துவ சேவைகளை அனைவருக்கும் அணுகலாக்குவதன் முக்கியத்துவத்தையும் அவர்கள் எடுத்துக்காட்டினர்.

PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES

இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

# இந்தியாவின் பிரைம் ஃபோக்கஸ் ஆனது ஜெனேரேட்டிவ் ஏஐ இல் உலக முன்னனி பெறுகிறது, பொருளடக்க உருவாக்கத்தின் எதிர்காலத்திற்கு ஆற்றல் தருகிறது பிரைம் ஃபோக்கஸ் லிமிடெடின் துணை நிறுவனமான டிஎன்இஜிஸ் பிரம்மா ஆனது மெட்டாஃபிசிக்கை இணைத்துக்கொள்வதாக அறிவித்துள்ளது

சென்னை, 21 பிப்ரவரி 2025: இந்தியாவின் முன்னனி காண்டென்ட் கிரியேஷன் பவர்ஹவுசான பிரைம் ஃபோக்கஸ் ஆனது ஜெனேரேட்டிவ் ஏஐ நிலவியலை உருமாற்றம் செய்வதில் முன்னனியில் உள்ளது மற்றும் இந்தியாவை உலக அரங்கில் நிலை நிறுத்தி வருகிறது. மூன்று தசாப்தங் களுக்கும் மேலாக நமித் மல்ஹோத்ராவின் தலைமையில் இந்நிறுவனத்தின் யுக்திபூர்வ அக்விசிஷன்கள் ஆனவை உலகளாவிய அரங்கில் இந்திய கலைஞர்களை வெற்றிகரமாக உயர்த்தியுள்ளன. இந்த முயற்சியானது டிஎன்இஜி க்கு அதிக எண்ணிக்கையில் மற்ற விருதுகள் உட்பட ஏழு அகாடமி விருதுகளை விஷுவல் எபெக்ட்சுக்காக பெற்றுத்தந்துள்ளது. இப்போது அது ஆக்கப்புத்தாக்கத்தின் அடுத்த புரட்சியை உந்துசெலுத்தி வருகையில் இந்த பிரான்டானது டிஎன்இஜி இன் பிரம்மாவின் கீழ் தனது மிக சமீபத்திய அக்விசிஷன் மூலம் ஜெனேரேட்டிவ் ஏஐ இல் ஒரு அகலக்கால் எடுத்துவைக்கிறது.

டிஎன்இஜி குரூப்பால் உருவாக்கப்பட்ட ஒரு உலகளாவிய ஏஐ மற்றும் காண்டென்ட் தொழில்நுட்ப நிறுவனமான பிரம்மா ஆனது இன்று ஏஐ காண்டென்ட் கிரியேஷன் யொழில்நுட்பங்களை உருவாக்கும் முன்னனி நிறுவனமான மெட்டாஃபிசிக்கின் அக்விசிஷனை அறிவித்தது. மெர்ஜர் மூலம் செயல்படுத்தப்பட்ட இந்த அக்விசிஷன் ஆனது தொழில்துறைகள் முழுதுமுள்ள நிறுவனங்கள், ஐபி உரிமைகள் கொண்டவர்கள், மற்றும் காண்டென்ட் கிளீயேட்டர்கள் ஆகியவர்களுக்கான பிரம்மாவின் ஏஐ ஆல் ஆற்றலூட்டப்பட்ட ப்ராடக்ட்டுகளின் உருவாக்கத்திற்கு வேகமளிக்கும் மற்றும் உகந்த அளவில் மிக உயர்தரமிக்க காண்டென்டை உருவாக்கும் ஆற்றலை அவர்களுக்கு வழங்கும்.

இந்த பரிவர்த்தனையை தொடர்ந்து பிரம்மாவின் மதிப்பீடானது யுஎஸ் டாலர் 1.43 பில்லியன் ஆகும். அபுதாபியை சேர்ந்த முன்னனி முதலீட்டாளரான யுனைட்டட் அல் சாக்கர் குரூப் (யுஎஸ்ஏஜி) ஆனது டிஎன்இஜி குரூப்புடன் இணைந்து மேலும் யுஎஸ் டாலர்25 மில்லியனை பிரம்மாவில் முதலீடு செய்யவிருக்கிறது. இது 2024-இல் டிஎன்இஜி குரூப்பில் யுஎஸ்ஏஜி இன் யுஎஸ் டாலர்200 மில்லியன் யுக்திபூர்வ முதலீட்டிற்கு பிறகு வருவது. இதன் மூலம் லிபர்டி குளோபல், எஸ்32, ராகுட்டேன் கேபிட்டால், திஒ வெஞ்சர்ஸ் மற்றும் 8விசி உள்ளிட்ட மெட்டாஃபிசிக்கின் நடப்பு முதலீட்டாளர்கள் பிரம்மாவில் பங்குதாரர்களாவார்கள்.

பிரம்மா ஆனது வீடியோ, இமேஜ் மற்றும் ஆடியோ வடிவங்களில் பயனர்-தனிப்பயனாக்கப்பட்ட காண்டென்டை உருவாக்கம் செய்யும் வகையில் ஏஐ-நேட்டிவ் ப்ராடக்ட்டுகளின் விரிவான தொகுப்பின் கூரு பகுதியாக ஏஐ, டேட்டா, மற்றும் ஒர்க்ஃப்ளோ நிர்வாகத்திற்கான அடிப்படை தொழில்நுட்பங்களை உருவாக்கவிருக்கிறது. இந்த பரிவர்த்தனையை தொடர்ந்து பிரம்மாவின் உலகளாவிய அணியானது 800 க்கும் அதிகமான பொறியாளர்கள் மற்றும் கிரியேட்டிவ் டெக்னாலஜிஸ்ட்டுகள் என்ற எண்ணிக்கைக்கு வளரும். இந்த அணியானது மெட்டாஃபிசிக்கின் முன்னோடி ஏஐ தொழில்நுட்பத்துடன் சேர்ந்து டிஜிட்டல் மனிதர்கள் மற்றும் கதாப்பாத்திர சிமுலேஷன்கள் ஆகியவற்றை உருவாக்குவதற்கு ஜிவாவின் தொழில்நுட்பம் உட்பட டிஎன்இஜி குரூப்பின் கிரியேட்டிவ் தொழில்நுட்ப அணிவகுப்பின் விருது-பெறும் ஆக்கப் புத்தாக்கங்களை ஒன்றிணைக்கும். கூடுதலாக காண்டென்ட் கண்டுபிடிப்பு, உருவாக்கம் மற்றும் நிர்வாகத்தில் எட்டு வருடங்களாக மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மூலம் கட்டமைக்கப்பட்ட மற்றும் உலக வாடிக்கையாளர் களினால் ஆதரவு வழங்கப்படும் சந்தை முன்னனி ஏஐ தீர்வான க்ளியர் தளத்தை அவர்கள் பயன்படுத்து வார்கள்.

இந்த அறிவிப்பு, ஜிவா-விற்கு அகாடமி ஆஃப் மோஷன் பிக்சர்ஸ் ஆர்ட்ஸ் அன்ட் சயன்சசினால் ஒரு 2025 சைடெக் விருது வழங்கப் பட்டதையும் மெட்டாஃபிசிக்கின் ஏஐ நியூரல் செயல்திறன் கருவி தொகுப்பிற்கு விஷுவல் எபெக்ட்ஸ் சொசைட்டி அவார்ட்சில் பெருமைமிகு எமர்ஜிங் டெக்னாலஜி அவார்ட் கௌரவம் வழங்கப்பட்டதையும் தொடர்ந்து வந்தது. "பிரைம் ஃபோக்கசில் ஆக்கப் புத்தாக்கம் என்பது எங்கள் தொலைநோக்கு பார்வையின் மையத்தில் எப்பொழுதும் இருந்து வருகிறது. மிக நவீன தொழில்நுட்பத்தின் மூலம் இந்தியாவின் பரந்த திறன் குவியலுக்கு அதிகாரமளித்து அவர்களுக்கு தொழில்துறைகள் முழுதும் ஆற்றல் வழங்குவதில் நாங்கள் நம்பிக்கை கொள்கிறோம். எங்களுடைய மிக சமீபத்திய அக்விசிஷன் மூலம் நாங்கள் தைரியமான ஒரு அகலக்காலை முன்னெடுத்து வைக்கிறோம் - அதாவது உலகளாவிய கேளிக்கை நிலவியலை சீர்குலைக்கும் ஒரு காலடியை. இந்த வெற்றியானது கதைகூறலின் ஒரு புதிய பரிமாணத்திற்கான திறவுகோலாக அமைகிறது மற்றும் இணையற்ற கட்புலன் மெய்மை மற்றும் ஆழ்ந்த மிழ் அனுபவங்களுடன் கூடி நமது சொந்த ராமாயணத்தை தத்ரூபமாக்க வருகிறது. சென்ற ஆண்டு, நாங்கள் ஜிவாவை இணைத்துக் கொண்டோம் மற்றும் இப்போது பிரம்மாவின் மெட்டாஃபிசிக் இணைப்பு மூலம் தொழில்துறைகள் முழுதும் இந்தியாவின் அடையாள சின்னங்களின் மிகவும் தத்ரூபமான டிஜிட்டல் டபுள்களை உருவாக்குவதற்கு எங்களிடம் சந்தை-முன்னனி 3டி மற்றும் 2டி கருவிகள் உள்ளன," என்று பிரைம் ஃபோக்கசின் நிறுவனர் மற்றும் டிஎன்இஜி-ன் உலகளாவிய சிஇஓ ஆன நமித் மல்ஹோத்ரா விளக்கினார்.

அவர் மேலும் கூறுகையில், "ஊடகம் மற்றும் கேளிக்கை தொடங்கி ரீடெய்ல், ஹெல்த்கேர், கல்வி மற்றும் பல துறைகள் வரை ஒவ்வொரு துறையிலும் ஐபி உரிமைகள் - கொண்டவர்கள் மற்றும் காண்டென்ட் கிரியேட்டர்கள் ஆகியோர் இப்போது அசாத்தியமான காண்டென்டை இதுகாறும் மிக அதிக பட்ஜெட்டுகளை கொண்டவர்களுக்காகவே எனவிருந்த உரிய அளவு மற்றும் தரம் ஆகியவற்றுடன் ஞருவாக்கும் ஆற்றலை பெற்றுள்ளனர். பிரம்மா ஆனது காண்டென்ட் உருவாக்கத்தின் எதிர்காலத்திற்காகவே வடிவமைக்கப்பட்ட ஒரு தளத்தின் மூலம் கதைகூறலை மறுவரையறை செய்யவிருக்கிறது," என்று விளக்கினார். பிரம்மாவின் செயல்பாட்டு நிர்வாக குழுவானது செயல்பாட்டு தலைவரான பிரபு நரசிம்மன், பிரைம் ஃபோக்கசின் நிறுவனர் மற்றும் டிஎன்இஜி-ன் உலகளாவிய சிஇஓ ஆன நமித் மல்ஹோத்ரா, மற்றும் மெட்டாஃபிசிக்கின் சிஇஓ மற்றும் கூடுதலாக பிரம்மாவின் தலைவராக சேவை புரியும் தாமஸ் கிரஹாம் ஆகியோரால் வழிநடத்தப்படும் வலுவான மற்றும் அனுபவமிக்க தொழில்நுட்ப தலைவர்களை கொண்டுள்ளது. இந்த பிரம்மா செயல்பாட்டு தலைமை குழுவானது பிரைம் ஃபோக்கசின் துணை நிறுவனர் மற்றும் சிஇஓ ஆன மற்றும் கிளியர் இன் தலைவர் பதவியையும் ஏற்கவுள்ள ராம்கி சங்கர நாராயணன்; பிரம்மாவின் சிதிஓ ஆக பணியாற்றவிருக்கும் டிஎன்இஜி குழுவின் சிதிஓ ஆன பால் சால்வினி; மற்றும் ஜிவாவில் கேரக்டர் டூல்ஸ் மற்றும் ஒர்க்ப்ளோஸ்-இன் இயக்குனர் மற்றும் ஜிவாவின் துணை தலைவராக நியமிக்கப்பட்டுள்ள கிராபோர்ட் டோரன் போன்ற முக்கிய உறுப்பினர்களையும் கொண்டுள்ளது. "பிரம்மாவுடன் நாங்கள் டிஎன்இஜி - இன் பல்வேறு அகாடமி விருது பெற்ற விஷுவல் எபெக்ட்சையும் அனிமேஷன் கருவி தொகுப்புகளையும் எடுத்து ஜெனேரேட்டிவ் ஏஐ-இன் நம்பமுடியாத ஆற்றலுடன் ஒன்று கலக்க போகிறோம் மற்றும் இதன் மூலம் இண்டஸ்ட்ரியின் முன்னனி போட்டோரியலிஸ்டிக் ஏஐ வீடியோ கிரியேட்டர் என்று நாங்கள் நம்புகின்றதை உள்ளிட்ட ஏஐ காண்டென்ட் தயாரிப்புகளின் கூரு தொகுப்பை நாங்கள் உருவாக்கவிருக்கிறோம்," என்று பிரம்மாவின் செயல்பாட்டு தலைவரான பிரபு நரசிம்மன் கூறினார். அவர் மேலும் விளக்குகையில், "உயர்-மட்ட திரைப்பட மற்றும் டிவி ப்ரொடக்ஷன் என்பதற்காக மட்டுமே இதுகாறும் இருந்த முக்கியஸ்த பயனர் குழுவிடமிருந்த பிரம்மாவை நிறுவனங்கள் மற்றும் பல்வேறு தொழில் துறைகளின் காண்டென்ட் கிரியேட்டர்களுக்கு சேவை செய்யும் வகையில் விஸ்தரிப்பு செய்வதில் நான் மிகவும் குதூகலமடைகிறேன்.

கூறுவதற்கு கதையிருந்து அதை தத்ரூப மாக்குவதற்கு கற்பனை வளம் உங்களிடம் இருந்தால் அதை விரைவாகவும், மலிவாகவும் சிறந்த தரத்திலும் செய்துமுடிக்க எங்களிடம் கருவிகள் உள்ளன," என்று கூறினார்.

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

# சாம்சங் இந்தியா கேலக்ஸி ஏ06 5ஜி ஐ அறிமுகப் படுத்துகிறது: அதிவேக இணைப்பு மற்றும் சக்தி வாய்ந்த செயல்திறனுடன் 'காம் கா 5ஜி' மலிவு விலையில்




சென்னை, 21 பிப்ரவரி 2025: இந்தியாவின் மிகப்பெரிய நுகர்வோர் எலக்ட்ரானிக்ஸ் பிராண்டான சாம்சங், இன்று கேலக்ஸி ஏ06 5ஜி ஐ அறிமுகப் படுத்துவதாக அறிவித்தது, இது மலிவு விலையில் அற்புதமான 5ஜி அனுபவத்தைக் கொண்டுவருகிறது. மிகவும் மலிவு விலை பட்ஜெட் கேலக்ஸி ஏ சீரிஸ் 5 நி ஸ்மார்ட்போனாக, கேலக்ஸி ஏ06 5ஜி ஆனது அதன் நம்பகமான செயல்திறன் மற்றும் நீண்ட ஆயுளுடன் நுகர்வோருக்கு அதிகபட்ச மதிப்பை வழங்கும் வகையில் வடிவமைக்கப் பட்டுள்ளது.

இன்று முதல், கேலக்ஸி ஏ06 5ஜி இந்தியாவில் உள்ள அனைத்து சில்லறை விற்பனை நிலையங்கள், சாம்சங் பிரத்தியேக கடைகள் மற்றும் பிற ஆஃப்லைன் சேனல்களில் பல சேமிப்பக வகைகளில் கிடைக்கும். 64 ஜிபி ஸ்டோரேஜ் கொண்ட 4 ஜிபி ரேம் வேரியண்டிற்கு வெறும் ரூ .10499 தொடங்கி, கேலக்ஸி ஏ 06 5 ஜி மூன்று நேர்த்தியான மற்றும் கவர்ச்சிகரமான வண்ணங்களில் வருகிறது - கருப்பு, சாம்பல் மற்றும் வெளிர் பச்சை. சிறப்பு வெளியீட்டு சலுகையாக, வாடிக்கையாளர்கள் சாம்சங் கேர் + பேக்கேஜுடன் ஒரு வருட திரை பாதுகாப்பு திட்டத்தை வெறும் ரூ .129 க்கு பெறலாம், இது கூடுதல் பாதுகாப்பையும் மன அமைதியையும் வழங்குகிறது.

"கேலக்ஸி ஏ06 5ஜி ஐ அறிமுகப்படுத்துவதன் மூலம், சிறந்த 5நி அனுபவத்திற்காக பிரிவில் முன்னணி 12 5ஜி பிராண்டுகளை நாங்கள் கொண்டு வருகிறோம். அற்புதமான இணைப்பு, சக்திவாய்ந்த செயல்திறன் மற்றும் பிரிவு முன்னணி கண்டுபிடிப்புகளை வழங்க வடிவமைக்கப் பட்டுள்ளது, இந்த சாதனம் அதிநவீன தொழில்நுட்பத்தை அனைவருக்கும் அணுகக்கூடியதாக மாற்றுவதற்கான எங்கள் உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப் படுத்துகிறது. இந்த சாதனத்தின் மூலம், பயனர்கள் ஒப்பிடமுடியாத ஆயுளுடன் வேலை மற்றும் பொழுது போக்குக்கான அதிவேக இணைப்பை அனுபவிக்க முடியும் என்பதையும் நாங்கள் உறுதி செய்கிறோம்" என்று சாம்சங் இந்தியாவின் னும்எக்ஸ் வணிகத்தின் பொது மேலாளர் அக் ஷய் எஸ் ராவ் கூறினார்.

அற்புதமான செயல்திறன் - கேலக்ஸி ஏ06 5ஜி அனைத்து நெட்வொர்க் இணக்கத்தன்மை, 12 5ஜி பேண்டுகள் மற்றும் அனைத்து தொலைத் தொடர்பு ஆபரேட் டர்களிலும் மேம்பட்ட நெட்வொர்க் இணைப்பு மற்றும் வேகமான வேகத்திற்கான கேரியர் திரட்டலைக் கொண்டுள்ளது. எம்திகே டி6300 செயலி மூலம் இயக்கப் படுகிறது, கேலக்ஸி ஏ06 5ஜி சக்திவாய்ந்த செயல்திறனை உறுதி செய்கிறது மற்றும் பல்பணி, கேமிங் மற்றும் ஸ்ட்ரீமிங் ஆகியவற்றை சிரமமின்றி செய்கிறது. இந்த ஸ்மார்ட்போன் ரேம் பிளஸ் அம்சத்துடன் 12 ஜிபி வரை ரேம் வழங்குகிறது.

அற்புதமான கேமரா மற்றும் டிஸ்பிளே - இந்த சாதனம் கூர்மையான மற்றும் விரிவான படங்களைப் பிடிக்க 50எம்பி பிரதான பின்புற கேமரா மற்றும் மேம்பட்ட தெளிவுக்காக 2எம்பி டெப்த் கேமராவைக் கொண்டுள்ளது, அதே நேரத்தில் 8எம்பி முன் கேமரா உயர்தர செல்ஃபிக்கள் மற்றும் வீடியோ அழைப்புகளை உறுதி செய்கிறது. இந்த ஸ்மார்ட்போன் ஒரு நேர்த்தியான மற்றும் ஸ்டைலான வடிவமைப்பைக் கொண்டுள்ளது, அதே நேரத்தில் 20: 9 விகிதத்துடன் அதன் விரிவான 6.7 இன்ச் எச்டி + டிஸ்ப்ளேவுடன் தெளிவான காட்சி அனுபவத்தை உறுதி செய்கிறது. இந்த ஸ்மார்ட்போனில் சிறந்த 25டபிள்யு ஃபாஸ்ட் சார்ஜிங் ஆதரவுடன் 5,000 எம்ஏஹெச் பேட்டரியும் உள்ளது.

# 'ஃபயர்' திரைப்படம் மாபெரும் வெற்றி: அனைவருக்கும் இயக்குநர்-தயாரிப்பாளர் ஜெ எஸ் கே மனமார்ந்த நன்றி




சென்னை, 21 பிப்ரவரி 2025: 'ஃபயர்' திரைப்படத்தின் வெற்றியை ரசிகர்கள் முன்னிலையில் படக்குழுவினர் கொண்டாட்டம், நாயகன் பாலாஜி முருகதாசுக்கு தங்க சங்கிலியை பரிசாக வழங்கினார் ஜெ எஸ் கே.

இரண்டாவது வாரத்தில் வெற்றி நடை போடும் 'ஃபயர்'; திரையரங்குகள், காட்சிகள் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரிப்பு

கடந்த வாரம் வெளியான 'ஃபயர்' திரைப்படத்தின் மாபெரும் வெற்றியின் மூலம் இயக்குநராகவும் அழுத்தமான முத்திரை பதித்துள்ள வெற்றிப்பட விநியோகஸ்தர், தயாரிப்பாளர் மற்றும் நடிகர் ஜெ எஸ் கே, 'ஃபயர்' திரைப்படத்தின் வெற்றியை ரசிகர்கள் முன்னிலையில் படக்குழுவினருடன் சென்னையில் உள்ள காசி டாக்கீஸில் நேற்றிரவு (பிப்ரவரி 19) கொண்டாடினார்.

வார நாளின் இரவுக் காட்சியிலும் ஹவுஸ்ஃபுல்லாக ஓடிய 'ஃபயர்' திரைப்படம் நிறைவடைந்தவுடன் திரையரங்கு நிர்வாகிகளின் உற்சாக அனுமதியோடு ரசிகர்களின் ஏகோபித்த பாராட்டுகளுக்கு மத்தியில் படத்தின் வெற்றியை கேக் வெட்டி குழுவினர் கொண்டாடினார்கள்.

ஜெ எஸ் கே, பாலாஜி முருகதாஸ், சாக்ஷி அகர்வால், சாந்தினி தமிழரசன், அனு, ஜீவா உள்ளிட்ட படக்குழுவினர் இதில் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியில் நாயகன் பாலாஜி முருகதாசுக்கு 'ஃபயர்' திரைப்படத்தை ஜெ எஸ் கே ஃபிலிம் கார்ப்பரேஷன் பேனரில் தயாரித்து இயக்கியுள்ள ஜெ எஸ் கே தங்க சங்கிலியை பரிசாக வழங்கினார்.

படத்தின் வெற்றி குறித்து மகிழ்ச்சி தெரிவித்த ஜெ எஸ் கே கூறியதாவது: "ஃபயர்' திரைப்படத்திற்கு பேராதரவு வழங்கிய பொதுமக்களுக்கும், ரசிகர்களுக்கும், விநியோகஸ்தர்களுக்கும், திரையரங்கு உரிமையாளர்களுக்கும், பத்திரிகை மற்றும் ஊடக நண்பர்களுக்கும் மனமார்ந்த நன்றி. நல்ல கதைக்கும், கடின உழைப்புக்கும் மக்கள் எப்போதும் ஆதரவளிப்பார்கள் என்பதற்கு 'ஃபயர்' படத்தின் வெற்றி சாட்சி.

பார்வையாளர்கள் காட்சிக்கு காட்சி கைதட்டி ரசிக்கிறார்கள். யூகிக்க முடியாத கிளைமேக்ஸ் அவர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது. வார நாட்களிலும் கூட்டம் குவிவதால் திரையரங்கு உரிமையாளர்கள் இரண்டாவது வாரத்திலும் காட்சிகள் மற்றும் திரைகளின் எண்ணிக்கையை தொடர்ந்து அதிகரித்து வருகிறார்கள்.

உண்மையான வெற்றிக்கு இது அடையாளம். சின்ன படத்தை பெரிய படமாக்கிய மக்களுக்கே இந்த வெற்றியை சமர்ப்பிக்கிறேன்."

'ஃபயர்' படத்தின் வெற்றி தனக்கும் தனது குழுவினருக்கும் பெரும் உற்சாகத்தையும் ஊக்கத்தையும் அளித்துள்ளதாகவும், தரமான படைப்புகளை தொடர்ந்து ரசிகர்களுக்கு வழங்க உறுதி பூண்டுள்ளதாகவும் ஜெ எஸ் கே தெரிவித்தார்.

# மக்கள் கொண்டாடித்தீர்த்த படமான "ஆட்டோஃகிராப்" 21 வருடங்களுக்கு பிறகு மீண்டும் திரையரங்குகளில் புதிய டிஜிட்டல் தொழில்நுட்பத்துடன் வெளியாகிறது...




சென்னை 21, பிப்ரவரி 2025: 2004 பிப்ரவரி 19ல் வெளியான ஆட்டோஃகிராப் பெரும் வரவேற்பை பெற்று 150 நாட்களை கடந்து சுமார் 75 திரையரங்குகளில் ஓடியது. எந்த திரையரங்கில் பார்த்தாலும் ஆட்டோஃகிராப் திரைப்படம் மட்டுமே ஓடிய காலத்தை முதல்முதலாக உருவாக்கியது. இதனால இப்படம் மக்களால் மறக்க முடியாத படமாக மாறியது.

இந்த திரைப் படத்தை தொடர்ந்து நிறைய திரைப்படங்கள் அதைப்போலவே உருவானது. அவைகளும் வெற்றி கண்டன. அப்படி டிரெண்ட் செட்டிங் படமான ஆட்டோஃகிராப் வரும் மே மாதம் மீண்டும் திரையரங்குகளில் திரையிட வேலைகள் மும்மரமாக நடைபெறுகிறது..

இப்போது ஆட்டோஃகிராப் படத்தின் ஒரு முன்னோட்டம் வெளியிடப் பட்டுள்ளது. இந்தியாவில் முதல் முறையாக ஏஐ தொழில் நுட்பத்தில் உருவாகியிருக்கும் ஒரு படத்தின் முன்னோட்டம் வெளியிடப் பட்டுள்ளது.

எதிலும் முன்னோடியாக முயற்சிகளை மெனக்கெடும் இயக்குனர் சேரன் கிமி தொழில்நுட்பத்தில் ஏற்கனவே வெளியான ஆட்டோஃகிராப் திரைப்படத்திற்கு உருவாக்கியிருப்பதை ஆச்சர்யமாக பார்க்கிறார்கள் திரையுலகத்தினர்.

# தைரியம் இருந்தால் அண்ணா சாலை பக்கம் வரட்டும்: அண்ணாமலைக்கு உதயநிதி ஸ்டாலின் சவால்

சென்னை 21, பிப்ரவரி 2025: தைரியம் இருந்தால் அண்ணாசாலை பக்கம் வர சொல்லுங்கள் என்று அண்ணா மலைக்கு உதயநிதி ஸ்டாலின் சவால் விடுத்துள்ளார். சென்னையில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது:- கல்வி நிதி, தி.மு.க. பா.ஜ.க.வுக்கான பிரச்சினை இல்லை. தமிழ்நாட்டு நிதி உரிமைக்காக, அண்ணாமலையை எதையாவது செய்ய சொல்லுங்கள். மக்கள் பிரச்சினையை திசை திருப்ப அண்ணா மலை எதை எதையோ உளறி கொண்டு இருக்கிறார். தனியார் பள்ளி நடத்து பவர்களை பாஜக தலைவர் விமர்சிப்பதே தவறானது. தனியார் பள்ளி என்ன சட்டவிரோதமாகவா நடத்திக்கொண்டு இருக்கிறார்கள். மத்திய அரசிடம் அனுமதி வாங்கி தான் நடத்திக்கொண்டு இருக்கிறார்கள். தனியார் பள்ளியில் காலையில் இலவச உணவு கொடுக் கிறார்களா? சீருடை இலவசமாக கொடுக் கிறார்களா? தயவுசெய்து இதை அதோடு ஒப்பிடாதீங்க. தமிழ்நாட்டுக்கான கல்வி நிதியை மத்திய அரசிடம் பேசி பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை வாங்கி தரச் சொல்லுங்கள். போஸ்டர் ஒட்டுவதாக கூறிய அண்ணாமலை தாராளமாக வரட்டும். அண்ணா அறிவாலயத்திற்கு வருவதாக அண்ணாமலை சொன்னார்; தைரியம் இருந்தால் அவரை அண்ணாசாலைக்கு முதலில் வர சொல்லுங்கள். இவ்வாறு அவர் கூறினார்.

# திருவான்மியூர் கொலை முயற்சி வழக்கில் 5 குற்றவாளிகளுக்கு 5 ஆண்டுள் கடுங்காவல் சிறை தண்டனை மற்றும் மொத்தம் ரூ.57,500/- அபராதம் விதித்து நீதிமன்றம் ஙிர்ப்பு.

சென்னை 21, பிப்ரவரி 2025: சென்னை, திருவான்மியூர், ரங்க நாதபுரம் பகுதியில் புருஷோத்தமன், வ/20, த/பெ.அசோக் என்பவர் வசித்து வருகிறார். புருஷோத்தமன் 27.05.2020 அன்று தனது வீட்டின் அருகில் நின்று கொண்டிருந்த போது, அதே பகுதியைச்சேர்ந்த கும்பல் மேற்படி புருஷோத்தமனிடம் முன்விரோதம் காரணமாக தகராறு செய்து கத்தியால் தாக்கிவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர். தாக்குதலில் காயமடைந்த புருஷோத்தமன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று இது குறித்து ஜே-6 திருவான்மியூர் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின்பேரில் கொலை முயற்சி உள்ளிட்ட பிரிவுகளில் வழக்கு பதிவு செய்யப்பட்டு எதிரிகள் 1.பிரபு, வ/19, த/பெ.செல்வராஜ், ரங்கநாதபுரம், திருவான்மியூர், சென்னை 2.கணேஷ், வ/19, த/பெ. செல்லப்பன், திருவான்மியூர், சென்னை 3.மேகநாதன், வ/20, த/பெ.குமரேசன், ரங்கநாதபுரம், சென்னை 4.அபி (எ) குணசேகர அபிஷேக் குமார், வ/19, த/பெ.ஆனந்தகுமார், ரங்கநாதபுரம், திருவான்மியூர், சென்னை ஆகிய 5.கோவிந்தா (எ) மோகன்ராஜ், வ/21, த/பெ.கோவிந்தராஜ், ரங்கநாதபுரம், சென்னை ஆகிய 5 நபர்களை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினர். ஜே-6 திருவான்மியூர் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினரால் முறையாக விசாரிக்கப்பட்டு, இறுதி அறிக்கை தயார் செய்து, உயர் நீதிமன்ற வளாகத்தில் உள்ள 5வது கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் தாக்கல் செய்து வழக்கு விசாரணை நடைபெற்று வந்த நிலையில், நீதிமன்ற வழக்கு விசாரணை முடிவடைந்து இவ்வழக்கில் 19.02.205 அன்று தீர்ப்பு வழங்கப்பட்டது. மேற்படி வழக்கில் எதிரிகள் மீது குற்றம் நிரூபிக்கப்பட்டதால், மேற்படி 5 எதிரிகளுக்கு தலா 5 வருடங்கள் கடுங்காவல் சிறை தண்டனை மற்றும் மொத்தம் ரூ.57,500/- அபராதமும் விதித்து கனம் நீதிபதி அவர்கள் தீர்ப்பு வழங்கினார்.

# நுங்கம்பாக்கம் பகுதியில் வீட்டின் பூட்டை உடைத்து தங்க நகைகளை திருடிய வழக்கில் கார் ஓட்டுநர் கைது. 14.3 கிராம் எடையுள்ள தங்க நகைகள் பறிமுதல்.

சென்னை 21, பிப்ரவரி 2025: சென்னை, நுங்கம் பாக்கம், லேக் ஏரியா, 5வது குறுக்கு தெருவில் எஸ்.ஹெச்.எம். சுலைமான், வ/67, த/பெ.சாகுல் ஹமீது மேக்கி என்பவர் வசித்து வருகிறார். இவர் கடந்த 21.12.2024 அன்று வீட்டை பூட்டிவிட்டு, சொந்த ஊருக்கு சென்றுவிட்டு, 03.01.2025 அன்று மேற்படி தனது வீட்டை பார்த்தபோது, வீட்டின் கதவு உடைக்கப்பட்டு பீரோவில் வைத்திருந்த 1.50 கிலோ கிராம் தங்க நகைகள், 50 கேரட் வைர நகைகள், ரொக்கம் ரூ.10 லட்சம், 1 லேப்டாப், 1 ஆப்பிள் ஐ-போன் மற்றும் 3 விலை உயர்ந்த கைக்கடிகாரங்கள் திருடு போயிருந்தது தெரியவந்தது. இது குறித்து, எஸ்.ஹெச்.எம். சுலைமான் எஃப்-3 நுங்கம்பாக்கம் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர். மேற்படி வழக்கில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகளை விரைந்து கைது செய்து களவு சொத்துக்களை மீட்க சென்னை பெருநகர காவல் ஆணையாளர் திரு.ஆ.அருண், இ.கா.ப அவர்கள் உத்தரவிட்டதின் பேரில் காவல் உயரதிகாரிகள் மேற்பார்வையில் தனிப்படைகள் அமைக்கப்பட்டு எஃப்-3 நுங்கம்பாக்கம் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினருடன் சூருங்கிணைந்து, சம்பவயிடத்திற்கு சென்று தீவிர விசாரணை செய்து, சம்பவயிடத்தின் அருகில் பொருத்தப் பட்டிருந்த சிசிடிவி கேமரா பதிவுகளை ஆய்வு செய்து, மேற்படி திருட்டு சம்பவத்தில் ஈடுபட்ட சந்திர பரேயர், வ/31, த/பெ.கதக்க பகதூர், சிந்துலி, நேபாளம் என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து சுமார் 14.3 கிராம் எடையுள்ள தங்க நகைகள் பறிமுதல் செய்யப்பட்டது. மேலும் விசாரணையில் கைது செய்யப்பட்ட நேபாளத்தைச் சேர்ந்த சந்திர பரேயர் மேற்படி வீட்டில் கார் ஓட்டுநராக பணிபுரிந்து வந்ததும், அவரது நண்பர்களுடன் சேர்ந்து மேற்படி வீட்டில் திட்டமிட்டு தங்கம் மற்றும் வைர நகைகளை திருடியது தெரியவந்தது. மேற்படி வழக்கில் சம்பந்தப்பட்டு களவு சொத்துக்களுடன் தலைமறைவாக உள்ள மற்ற குற்றவாளிகளை தனிப்படை போலீசார் தீவிரமாக தேடிவருகின்றனர். கைது செய்யப்பட்ட எதிரி சந்திர பரேயர் விசாரணைக்குப் பின்னர் 19.02.2025 அன்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டார். மேற்படி வழக்கில் சிறப்பாக புலனாய்வு செய்து, நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு சிறப்பு கவனம் செலுத்தி குற்றவாளிகளுக்கு உரிய தண்டனை பெற்று தந்த யி-6 திருவான்மியூர் காவல் நிலைய ஆய்வாளர் மற்றும் நீதிமன்ற அலுவல் பணிபுரியும் காவல் குழுவினரை உயரதிகாரிகள் வெகுவாகப் பாராட்டினர்.

# சென்னையின் பொலிவாக்கத்தில் கிரேடு-ஏ லாஜிஸ்டிக்ஸ் பூங்காவில் கூடுதலாக ரூ. 640 கோடியை முதலீடு செய்யும் சிசிஜ குழுமம்



சென்னை 21, பிப்ரவரி 2025: இந்தியாவின் முன்னணி 4 பி எல் ஒருங்கிணைக்கப்பட்ட லாஜிஸ்டிக்ஸ் மற்றும் சப்ளை செயின் நிறுவனமான சிசிஜ குழுமம், சென்னையின் பொலிவாக்கத்தில், பேஸ் 2 அமைவிடத்தில், 20 லட்சம் சதுர அடி பரப்பளவில் கிரேடு-ஏ லாஜிஸ்டிக்ஸ் பூங்கா உருவாக்க பணிக்காக தோராயமாக ரூ. 640 கோடி என்ற கூடுதல் முதலீடு செய்யப்படுவதை அறிவித்திருக்கிறது. பேஸ் 1-ல் இதற்கு முன்னதாக ரூ. 250 கோடியை இந்நிறுவனம் முதலீடு செய்திருந்த நிலையில் இப்போது இக்கூடுதல் முதலீடு மேற்கொள்ளப்படுகிறது. இப்பிராந்தியத்தில் உலகத்தரத்திலான லாஜிஸ்டிக்ஸ் உட்கட்டமைப்பு வசதியை மேலும் விரிவாக்குவதில் இந்நிறுவனம் கொண்டிருக்கும் பொறுப்புறுதியை இது வலுவாக சுட்டிக்காட்டுகிறது.

இந்த சமீபத்திய முதலீட்டோடு சேர்த்து இதுவரை பொலிவாக்கம் லாஜிஸ்டிக்ஸ் அமைவிடத்திற்காக மொத்தத்தில் ரூ. 890 கோடியை சிசிஜ குழுமம் ஒதுக்கீடு செய்திருக்கிறது. இந்த மாபெரும் முதலீடானது, இந்தியாவின் சரக்கு கிடங்கு மற்றும் வழங்கல் சங்கிலித்தொடர் சூழலமைப்பில் ஒரு முக்கிய செயற்பாட்டாளராக சிசிஜ குழுமத்தை நிலைநிறுத்தியிருக்கிறது.

இவ்விரிவாக்க பணியானது செயல்உத்தி ரீதியாக இரு பிரிவுகளாக கட்டமைக்கப்படுகிறது. பேஸ் 2ஏ-யின் கீழ் நிலையான (ஸ்டாண்டர்டு) தேவைப்பாடு அமைவிடம் நிறுவப்பட்டு 2025 மத்தியில் செயல்பாட்டுக்கு வரும். பேஸ் 2பி-யில் குறிப்பிட்ட தொழில்துறையின் தேவைகளுக்கு ஏற்ப வடிவமைக்கப்படுகிற தீர்வுகளைக் கொண்டதாக, அதாவது தேவைக்கேற்ப பொருந்துவதாக கட்டமைக்கப்படும் பிதிஎஸ் அமைவிடம் உருவாக்கப்படும்.

தென்னிந்தியாவில் ஒரு மிக முக்கிய லாஜிஸ்டிக்ஸ் மற்றும் வழங்கல் சங்கிலித்தொடர் குவிமையமாக சென்னை உருவாகிவரும் நிலையில் இந்த நவீன சரக்குக்கிடங்கானது பல்வேறு வகைப்பட்ட தொழில் நிறுவனங்களின் தேவைகளை பூர்த்தி செய்யும். இவற்றுள் மின்-வர்த்தக நிறுவனங்கள், ஆட்டோமோட்டிவ், எஃப்எம்சிஜி மற்றும் உற்பத்தி நிறுவனங்கள் போன்றவை உள்ளடங்கும். உலகளாவிய தரங்களின்படி உருவாக்கப்படும் இது, பளுவைத் தாங்கும் மேம்பட்ட திறனுக்காகவும் மற்றும் தடங்கலின்றி எளிதாக சரக்குகளை எடுத்துச்செல்வதற்காகவும் எஃப்எம்2 தளம் கொண்டதாக அமைக்கப்படும். தானியக்க ஷட்டர்ஸ்களை கொண்டிருக்கும் இதில் மேம்பட்ட காற்று தரத்திற்காக ஒவ்வொரு

மணிநேரத்திற்கும் ஆறுமுறை காற்று மாற்றப்படுவதை உறுதிசெய்கிற பாசிவ் காற்றோட்ட வசதி அமைக்கப்படுகிறது.

பல்வேறு துறைகளிலும், மேம்பட்ட இயக்க திறனை உறுதிசெய்யும் வகையில் கனரக சுமை பொருட்களுக்கான ரேக்கிங் அமைப்புகள் மற்றும் அதிக இடைவெளி உள்ள பேஸ்களை வாடிக்கையாளர்கள் திறம்பட திட்டமிடுவதை ஏதுவாக்குகிறவாறு இடத்தின் சிறப்பான

பயன்பாட்டு வசதியை வழங்கும் விதத்தில் இந்த சரக்குக்கிடங்கு அமைவிடம் ஆழமான சிந்தனையின் அடிப்படையில் வடிவமைக்கப் படுகிறது. முன்பே கட்டமைக்கப்பட்ட வெப்பநிலை கட்டுப்படுத்தப்பட்ட பிரிவுகள் இந்த அமைவிடத்தில் இடம்பெறவில்லை என்றாலும் குறிப்பிட்ட தேவைகளை எதிர்கொள்வதற்காக டெனன்ட் இம்ப்ரூவ்மெண்ட் ஸ்கீம் (திஐஎஸ்) என்பதன்கீழ் இவற்றை பிரத்யேகமாக வடிவமைத்துக்கொள்ள இயலும். நெகிழ்வுத்திறனுக்காக திட்டமிட்டு வடிவமைக்கப்பட்டிருக்கும் இந்த அமைவிடம் பிளக் & பிளே மாதிரியில் இயங்குவதால் பிசினஸ் நிறுவனங்கள் இதனை மிக விரைவாக பயன்படுத்தவும் மற்றும் தங்களது இயக்க செயல்பாடுகளை எளிதாக உயர்த்திக்கொள்ளவும் அனுமதிக்கும்.

நிலைப்புத்தன்மை மீது சிசிஜ குழுமம் கொண்டிருக்கும் பொறுப்புறுதியின் ஒரு பகுதியாக பயன்படுத்திய நீரை சுத்திகரிப்பதற்காக ஒரு கழிவுநீர் சுத்திகரிப்பு மையமும் (எஸ்திபி) இந்த வளாகத்திற்குள் இடம்பெறும். சுத்திகரிக்கப்பட்ட நீரானது, தோட்ட பணிகளுக்காகவும் மற்றும் கழிப்பறைகளின் பயன்பாட்டுக்காகவும் திரும்பவும் மேம்படுத்தப்படும். இதற்கும் கூடுதலாக, வழக்கமான மின் ஆதாரவளங்களின் மீதான சார்ந்திருப்பை குறைக்கவும் மற்றும் பசுமை ஆற்றல் என்ற இலக்கை நோக்கிய ஒரு முன்னேற்ற நடவடிக்கையாகவும் சோலார் பவர் சாதனங்கள் நிறுவப்படும். இயற்கையான வெளிச்சத்தை மேலும் அதிகமாக்கும் விதத்தில் மேற்கூரை மீது அமைக்கப்படும் ஸ்கைலைட்டுகள் இந்த அமைவிடத்தின் ஆற்றல் செலவை மேலும் குறைக்கும்.

மேம்படுத்தப்பட்ட பாதுகாப்பிற்காக நீர் பெறுவதற்கான அமைப்புகள், நீர் தெளிப்பான்கள் மற்றும் தீ எச்சரிப்பு சாதனங்கள் உட்பட மிக நவீன தீ பாதுகாப்பு சாதனங்கள் நிறுவப்பட்டதாக இந்த சரக்குக்கிடங்கு வளாகம் ஒருங்கிணைக்கப்படும்.

சிசிஜ குழுமம், மின்-வர்த்தகம், ரீடெய்ல், இரசாயனம், எஃப்எம்சிஜி, சுகாதார பராமரிப்பு & மருந்து தயாரிப்பு மற்றும் ஆட்டோமோட்டிவ் போன்ற வேறுபட்ட பல்வேறு தொழில் பிரிவுகளைச் சேர்ந்த 1,000-க்கும் அதிகமான வாடிக்கையாளர்களுக்கு தற்போது சேவைகளை வழங்கிவருகிறது. இத்தொழில்துறையில் 48 ஆண்டுகள் அனுபவமும், நிபுணத்துவமும் கொண்டிருக்கும் நிறுவனம் நாடெங்கிலும் 48 நகரங்களில் வலுவான இருப்பினை உருவாக்கியிருக்கிறது. மொத்தத்தில் 15 மில்லியன் சதுர அடிக்கும் அதிகமான பரப்பளவில் சொந்த சரக்குக்கிடங்குகள் மற்றும் லாஜிஸ்டிக்ஸ் பூங்காக்களை இந்நிறுவனம் நிர்வகித்து வருகிறது. 1,000-க்கும் கூடுதலான திறன்மிக்க தொழில்முறை பணியாளர்கள் மற்றும் 1,200-க்கும் அதிகமான வாகனங்களின் தொகுப்பால் இதன் செயல்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதுமட்டுமன்றி, உலகளவிலும் தனது செயல்பாடுகளை சிசிஜ விரிவாக்கி தற்போது 105-க்கும் அதிகமான நாடுகளில் செயல்பட்டு வருகிறது. அத்துடன், இந்தியாவெங்கிலும் 20-க்கும் கூடுதலான விமான நிலையங்கள் மற்றும் துறைமுகங்களில் கணிசமான செயலிருப்பையும் இது பேணுவது குறிப்பிடத்தக்கது.

# தமிழ்நாடு - மாணவர் இயக்கங்களின் கூட்டமைப்பின் (எஃப்எஸ்ஓ-திஎன்) மாநிலபொறுப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

சென்னை, 21 பிப்ரவரி 2025: தமிழ்நாடு - மாணவர் இயக்கங்களின் கூட்டமைப்பின் (எஃப்எஸ்ஓ-திஎன்) மாநிலப் பொறுப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம், வருகிற 21-02-2025 வெள்ளிக்கிழமை, காலை 09.00 மணி முதல் 10 மணி வரை சென்னை, தேனாம்பேட்டை, "அண்ணா அறிவாலயம்", கலைஞர் அரங்கில், அமைப்பின் ஒருங்கிணைப்பாளர்கள் சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ. மற்றும் ஜி.அரவிந்த்சாமி ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ளது. இக் கூட்டமைப்பில், தி.மு.க. மாணவர் அணி, இந்திய மாணவர் சங்கம் (எஸ்எஃப்ஐ), திராவிட மாணவர் கழகம் (டிஎஸ்எஃப்), தமிழ்நாடு மாணவர் காங்கிரஸ் (என்எஸ்யுஐ), ம.தி.மு.க. மாணவர் அணி (எம்டிஎம்கே), அனைத்திந்திய மாணவர் பெருமன்றம் (ஏஐஎஸ்எஃப்), முற்போக்கு மாணவர் கழகம் (ஆர்எஸ்எஃப்), முஸ்லிம் மாணவர் பேரவை (எம்எஸ்எஃப்), சமூகநீதி மாணவர் இயக்கம் (எஸ்எம்ஐ), மாணவர் இந்தியா (எம்ஐ), இந்திய மாணவ இஸ்லாமியர் அமைப்பு (எஸ்ஐஓ), புரட்சிகர மாணவர்-இளைஞர் முன்னணி (ஆர்எஸ்ஒய்எஃப்), அனைத்திந்திய ஜனநாயக மாணவர் மன்றம் (ஏஐடிஎஸ்ஓ), மக்கள் நீதி மய்யம் மாணவர் அணி (எம்என்எம்), அனைத்திந்திய கிராமப்புற மாணவர் சங்கம், திராவிட மாணவர் பேரவை உள்ளிட்ட மாணவர் அமைப்புகள் இடம்பெற்றுள்ளன. ஆலோசனைக் கூட்டத்தில் கூட்டமைப்பில் உள்ள மாணவர் அமைப்பின் பொறுப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

# விளையாட்டுப்போட்டிகள் மற்றும் பரிசளிப்பு விழா - 2025



சென்னை, 21 பிப்ரவரி 2025: எஸ்.ஆர்.எம் அறிவியல் மற்றும் தொழில் நுட்பக்கல்வி நிறுவன அறிவியல் மற்றும் மானுடவியல் புலத்தின் வடபழனி வளாக உடற்கல்வியியல் துறையின் சார்பாக ஆண்டுவிழாப் போட்டிகள் மற்றும் பரிசளிப்பு நிகழ்வு பிப்ரவரி மாதம் 20-ஆம் நாள் இனிதே நடந்தேறியது. ஆண் பெண் இருபாலருக்குமான வாலிபால், ஃபுட்பால், கிரிக்கெட், பேட்மிட்டன், த்ரோபால், டேபிள் டென்னிஸ், செஸ், கேரம், யோகா உள்ளிட்ட பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் மாணவர்களுக்காக நடத்தப்பெற்றன. ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் திரளாகக் கலந்துகொண்ட இவ்விளையாட்டுப்போட்டிகளில் முந்நூறு மாணவர்கள் தம் விளையாட்டுத் திறத்தால் வென்று பரிசு மற்றும் பதக்கங்களைப் பெற்றனர். பரிசு பெற்ற மாணவர்களில் பெரும்பாலானோர் வணிகவியல்துறை சார்ந்தவர்கள் ஆதலால், அத்துறைக்கு வெற்றிக் கோப்பை வழங்கப் பட்டது.

வடபழனி வளாகக் கலையரங்கில் நிகழ்ந்த பரிசளிப்பு விழாவில் அறிவியல் மற்றும் மானுடவியல் புலத் தலைவர் (பொறுப்பு) முனைவர் சி.வி.ஜெயக்குமார் வரவேற்புரை வழங்கினார். உடற்கல்வியல் இயக்குநர் பேராசிரியர் முனைவர் ஆர்.மோகன கிருஷ்ணன் விழாத் தொடக்கவுரை ஆற்றினார். வணிகவரித்துறை ஆய்வாளர் திரு ஏ. முத்துசாமி அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு மாணவர்களுக்கு ஊக்கமளித்துப் பாராட்டினார். இன்றைய சூழ்நிலையில் விளையாட்டு என்பது நம் உடல்மன ஆரோக்கியத்திற்கு எவ்வளவு முக்கியமானது என்பதைத் தன் உரையின்போது கோடிட்டுக் காட்டினார். நிறைவாக, உடற்கல்வியியல் துறைத்தலைவர் தேன்மொழி நன்றியுரை வழங்கினார்.

# காசி தமிழ் சங்கமம் 3.0: மத்திய பல்கலைக்கழக மாணவர்கள் ஸ்ரீராம பிரான் ஆலயத்தில் வழிபாடு செய்தனர்



சென்னை, 21 பிப்ரவரி 2025: மூன்றாவது ஆண்டாக நடைபெறும் காசி தமிழ் சங்கமம் நிகழ்வில் மத்திய பல்கலைக்கழக மாணவர்கள் இன்று ஸ்ரீராம பிரான் ஆலயத்தில் வழிபாடு செய்தனர். இந்தக் குழுவினர் அயோத்தியாவுக்கு வருகை தந்த போது, மாவட்ட நிர்வாகம் மாலைகள் அணிவித்து வரவேற்றது. பின்னர் வாரணாசியின் பெருமை மற்றும் ஆன்மீக பாரம்பரியம் குறித்து பிரதிநிதிகளுக்கு விளக்கம் அளிக்கப்பட்டது.

இந்தக் குழுவினர் ஸ்ரீராம பிரான் ஆலய வளாகத்திற்கு சென்ற போது, ஜெய் ஸ்ரீராம் முழக்கமிட்டனர். 500 ஆண்டுகளுக்கு பின் கட்டப்பட்ட இந்த பிரம்மாண்ட கோவிலை காண்பது, தமிழ்நாட்டின் பிரதிநிதிகளுக்கு உணர்ச்சிகரமான தருணமாக இருந்தது. வழிபாட்டுக்குப்பின் மகிழ்ச்சியை வெளிப்படுத்திய அவர்கள், அரசால் செய்யப்பட்டிருந்த ஏற்பாடுகளுக்கு பாராட்டு தெரிவித்தனர். மத்திய கல்வி அமைச்சகத்தின் முன்முயற்சிகளையும் அவர்கள் பாராட்டினர்.

"பகவான் ஸ்ரீராமரை தரிசித்தது மிகவும் திருப்தியளித்தது. இந்த கோவிலுக்கு வர வேண்டும் என்று விரும்பிய நாங்கள், இவ்வளவு அருகிலிருந்து சுவாமி தரிசனம் செய்வோம் என்று எண்ணியதில்லை. இந்த வாய்ப்பு, பிரதமர் நரேந்திர மோடியின் தொலைநோக்குப் பார்வையாலும் மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதானின் முன்முயற்சியாலும் எங்களுக்கு சாத்தியமானது. நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம்" என்று மாணவர்கள் குழுவில் இடம்பெற்றுள்ள ஹரிபிரியா கூறினார்.

தங்களின் பயண அனுபவம் குறித்து விவரித்த மற்றொரு மாணவரான நாராயண், "நாங்கள் வாரணாசியில் உள்ள காசி விஸ்வநாதர் ஆலயத்தை பார்வையிட்டு அதன் வரலாற்றை அறிந்து கொண்டோம். அதற்குப்பின் மகா கும்பமேளாவிற்காக நாங்கள் பிரயாக்ராஜ் சென்றோம். அங்கு புனித நீராடியபின், அயோத்தி திரும்பி பகவான் ஸ்ரீராமரை தரிசித்தோம். அரசின் முயற்சிகளால் இந்தப் பயணம் மிகவும் சிறப்புக்குரியதாக அமைந்துள்ளது. இரு மாநிலங்களின் கலாச்சாரங்களையும், பாரம்பரியங்களையும் நெருக்கமாகக் கொண்டுவர இந்தப் பயணம் உதவும்" என்றார்.

# நகரத் தேடல் : பாரதத்தின் வண்ணச் சாயல்கள்

சென்னை, 21 பிப்ரவரி 2025: வேவ்ஸ் நகரத் தேடல்: பாரதத்தின் வண்ணச் சாயங்கள் என்பது புதுமையான கல்வி விளையாட்டாகும். இது நகைச்சுவை மற்றும் ஈடுபாட்டு அனுபவத்தின் மூலம் இந்தியாவின் நகர்ப்புற மேம்பாட்டை வாழ்க்கையில் இணைக்கிறது. பிரதமர் நரேந்திர மோடியின் நகர்ப்புற திட்டமிடலுக்கான தொலைநோக்குப் பார்வையுடன் ஒத்திசைந்து இது வடிவமைக்கப்பட்டுள்ளது. நிதி ஆயோக் மூலம் நிர்ணயிக்கப் பட்டுள்ள நீடித்த வளர்ச்சி இலக்குகள் குறித்து விளையாடுவோருக்கு இது கற்றுத்தருகிறது.

மத்திய தகவல் ஒலிபரப்பு அமைச்சகத்தின் ஒத்துழைப்புடன் மின்னணு விளையாட்டு கூட்டமைப்பால் அட்டைகள் அடிப்படையில் இந்த விளையாட்டு உருவாக்கப் பட்டுள்ளது. தூய்மை, சுகாதாரம், கல்வி, உள்கட்டமைப்பு போன்ற முக்கியமான வளர்ச்சிக் குறியீடுகள் அடிப்படையில் இந்தியா முழுவதும் உள்ள 56 நகரங்களை ஒப்பீடு செய்யும் வகையில் இந்த விளையாட்டு அமைந்துள்ளது. இந்த விளையாட்டிற்கு 2025 பிப்ரவரி 15 நிலவரப்படி 1920 பங்கேற்பாளர்கள் பதிவு செய்துள்ளனர்.

இந்த நகரத் தேடல் விளையாட்டில் அனைத்து வயதினரும் பங்கேற்கலாம். 2024 அக்டோபர் 25-ல் தொடங்கியுள்ள இந்தப் போட்டி, 2025 ஏப்ரல் 25 வரை நடைபெறும். வெற்றியாளர்கள் வரும் மே மாதம் நடைபெறவுள்ள வேவ்ஸ் எனும் உலக ஒலி, ஒளி மட்டும் பொழுதுபோக்கு உச்சிமாநாட்டில் பாராட்டப்படுவார்கள்.